விடை குறிப்பு

## ஆண்டுப் பொதுத் தேர்வு - மார்ச் 2024 ( [illegible] )

www.Padasalai.Net

## 11 - ஆம் வகுப்பு - வணிகவியல்

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | அ | அமைப்பு முறையேடு | 1 | ஈ | நேரடி வரி |
| 2 | ஈ | நேரடி வரி | 2 | ஆ | வழிச்சீட்டு |
| 3 | ஆ | வியாபாரம் | 3 | இ | 14 |
| 4 | ஆ | வழிச்சீட்டு | 4 | ஆ | கிராம சேமிப்பு |
| 5 | ஆ | பன்னாட்டு வியாபாரம் | 5 | இ | 51% |
| 6 | இ | ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர் | 6 | அ | 2 லட்சம் |
| 7 | அ | 2 லட்சம் | 7 | ஆ | மொத்த வியாபாரி |
| 8 | ஆ | மொத்த வியாபாரி | 8 | அ | அமைப்பு முறையேடு |
| 9 | ஆ | ஒப்பந்தத்தால் | 9 | ஆ | பன்னாட்டு வியாபாரம் |
| 10 | இ | நடைபாதை வியாபாரிகள் | 10 | ஆ | வியாபாரம் |
| 11 | ஆ | கிராம சேமிப்பு | 11 | ஆ | ராபர்ட் ஓவென் |
| 12 | இ | 51% | 12 | ஈ | 1) - (ii) , 2- (iv), 3 - (i) , 4 - (iii) |
| 13 | அ | வழங்கல் | 13 | ஆ | ஒப்பந்தத்தால் |
| 14 | ஈ | அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் | 14 | ஈ | உரிமையாளர்கள் |
| 15 | ஈ | உரிமையாளர்கள் | 15 | ஈ | செலவு குறைப்பு |
| 16 | ஈ | 1) - (ii) , 2- (iv), 3 - (i) , 4 - (iii) | 16 | அ | 3 |
| 17 | ஈ | செலவு குறைப்பு | 17 | இ | ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர் |
| 18 | அ | 3 | 18 | அ | வழங்கல் |
| 19 | ஆ | ராபர்ட் ஓவென் | 19 | இ | நடைபாதை வியாபாரிகள் |
| 20 | இ | 14 | 20 | ஈ | அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் |

### பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

21. போக்குவரத்து - வரையறு.
    - கே.கே. செக்சேனாவின் கூற்றுபடி, " ஓர் இருட்டறையில், மெழுகு வர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது".

22. கூட்டுரு சாரா நிறுவனங்கள் யாவை?
    1) தனியாள் வணிகம் 2) கூட்டாண்மை நிறுவனம் 3) இந்து கூட்டுக் குடும்பம்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

23. நிறுமத்தின் ஏதேனும் இரண்டு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
    1) தனியான சட்ட நபர் தன்மையுடையது
    2) வரையறு பொறுப்பு
    3) நீடித்த வாழ்வு
    4) தனிப்பட்ட சொத்து
    5) பங்குகளின் மாற்றியல்பு
    6) பொது முத்திரை
    7) வழக்காடும் திறனும் மற்றும் வழக்கில் பதில் சொல்லும் உரிமையும்
    8) தனிப்பட்ட மேலாண்மை
    9) ஒரு பங்கு - ஒரு வாக்கு

www.Trb Tnpsc.com

24. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.
    1. பாட்டா
    2. கோல்கேட் பாமொலிவ்
    3. சோனி கார்ப்பரேசன்
    4. சுசூகி
    5. டைமெக்ஸ்
    6. மைக்ரோ சாப்ட் நிறுவனம் 7) நோக்கியா நிறுவனம் 8) நெஸ்ட்லே 9) கோகோ கோலா

25. துறைவாரி அமைப்புகளின் தன்மைகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.
    1) பேரளவு அமைப்பு
    2) பல்பொருள் விற்பனை
    3) துறைகளின் ஒருங்கிணைப்பு
    4) வாங்கும் வசதிகள்
    5) மையக் கொள்முதல்

26. இருதரப்பு வாக்குறுதிகள் என்றால் என்ன ?
    - ஒரு நபர் தனது வாக்குறுதியை மற்றவரின் வாக்குறுதிக்கு மறு பயனாக அளிக்கும்போது, அவ்விரு வாக்குறுதிகளும் இருதரப்பு வாக்குறுதிகள் என அழைக்கப்படுகின்றன.

27. வாணிப சமநிலை என்றால் என்ன?
    - வாணிப சமநிலை என்பது, ஒரு வருடத்தில் ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிப்பதாகும்.

28. சரக்காணையின் வகைகளை குறிப்பிடுக.
    1) வெளிப்படை சரக்காணை
    2) வரையறுக்கப்பட்ட சரக்காணை
    3) உறுதி செய்யும் சரக்காணை

29. உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?
    - அந்நிய நாட்டு முதலீட்டாளரிடமிருந்து, நிதி திரட்டும் நோக்குடன், அந்நிய செலாவணியில், வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணமே உலகளாவிய வைப்பு ரசீது எனப்படும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

30. தூய கடன் என்றால் என்ன?

www.Padasalai.Net

- தூய கடன் என்பது, எவ்விதமான பிணையங்களையும் பெறாமல், கடன்பெறுநரின் குணநலன்கள், திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் அவரின் செயல் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தரப்படுவதாகும்.

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. வீட்டு வசதி கூட்டுறவு பற்றி சிறு குறிப்பு வரைக.
- உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே, வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் எனப்படுகின்றன.
- சொந்தமாக வீடு கட்ட விரும்பும் நபர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடு கட்ட கூட்டுறவு சங்கங்களை நிறுவுகின்றனர்.
- இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு சுமார் 10 முதல் 20 ஆணடு கால தவனணயில், வீட்டு கடன் தந்து , அவர்களை சொந்த வீடு கட்டிக்கொள்ள உதவுகின்றன.

32. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?
- சரக்குகள் பெரிய அளவிலான பொருள்கள் ஒதுக்கப்படும் போது, கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.
- எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறதோ அது 'கப்பல் வாடகை ஒப்பாவணம்' என்று அழைக்கப்படும்.

33. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.
- ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உதவிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனம், நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள்

34. தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் - விளக்குக.
- இது 2005 இல், இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது.
- இந்த மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதிபரிமாற்ற நடவடிக்கைகள், தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்டநேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன.
- NEFT செயல்படுத்தப்பட்ட கிளைவங்கிகளில் கணக்குகளைப் பராமரிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் NEFT முறையைப் பயன்படுத்தத் தகுதியுடையவையாகும்.
- பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் நடைபெறுவது இல்லை.
- ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும், காலை 8.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி முடிய 23 தீர்வுகள் மட்டுமே ஒரு நாளில் அனுமதிக்கப்படுகின்றன.
- NEFT பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவது இல்லை.



35. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக

www.Trb Tnpsc.com

1. மொத்த வியாபாரிகள், உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
2. இவர்கள், பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
3. இவர்கள், ஒரு குறிப்பட்ட பொருளின், பல்வேறு வகைகளை விற்பனை செய்கினறனர்.
4. பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
5. சில்லறை வியாபாரிகளுக்கு, இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
6. உற்பத்தியாளர்களுக்கும், இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.
7. இவ்வகை வியாபாரத்திற்குப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
8. நகரங்கள் பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

36. அடகு கடன் என்றால் என்ன?
- கடன்பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுவதற்கு அடகு கடன் எனப்படும்.

37. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் ஏதேனும் மூன்றினை எழுதுக
1. ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
2. உள் நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.
3. உள்நாட்டு உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
4. உள்நாட்டு வியாபாரம், இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.
5. இதில் போக்குவரத்து இடர்பாடு, பன்னாட்டு வணிகத்தைவிட குறைவாகவே உள்ளது.
6. இதில் உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.
7. இதன் நோக்கம், அத்தியாவசியப் பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்.
8. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மட்டுமே இடம் பெறும்.
9. ஒரே நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து பொருட்கள் வாங்கப்படுகிறது.
10. உள்நாட்டுப் போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் வினியோகம் செய்யப்படுகிறது.
11. இதில் சுங்கவரி, இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை.

38. வணிகம் பொருள் தருக.
- பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.



www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

39. நேரடி வரிக்கும் மறைமுக வரிக்கும் உள்ள வேறுபாடுகள் தருக ( ஏதேனும் 3 )

www.Padasalai.Net

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1.பொருள் | ஒரு நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது | சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது |
| 2. வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம் | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு ஆனால் மதிப்பீட்டிற்குரியவரால் செலுத்தப்படுகிறது |
| 3. ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| 4. பணவீக்கம் | இது, பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது | இது, பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது |
| 5. மாற்றுதல் | மாற்ற முடியாது | மாற்ற முடியும் |
| 6. உதாரணங்கள் | சொத்து வரி, வருமான வரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |

40. கப்பல் இரசீதின் உள்ளடக்கங்கள் யாவை ?

1) ஏற்றுமதி செய்பவர் பெயர்,
2) கப்பல் பெயர்
3) பொருள்களை ஏற்றும் இடம்
4) கப்பலில் ஏற்றப்பட்ட பொருள்களின் விவரங்கள்
5) இறக்கவேண்டிய துறைமுகத்தின் பெயர்
6) சரக்குகள் வழங்கப்படும் அல்லது செலுத்தப்பட வேண்டிய பொருட்கள்
7) யாருக்காக பொருட்கள் ஏற்றப்பட்டதோ, தேதி வாரியாக ஒப்படைத்தல் போன்றவை அதில் இடம் பெற்றிருக்கும்

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. அ) துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 )

1) <u>எளிமையான அமைப்பு</u>
   - இதனை அமைப்பது எளிது.
   - இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.



2) <u>பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு</u>
   - இதனை பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும்.
   - அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

www.Trb Tnpsc.com

3) <u>இரகசியம் காத்தல்</u>
   - பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவை அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும்.
   - அப்போதுதான் அத்துறைகளில் பணியாளர்கள், தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.
4) <u>பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு</u>
   - இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால், பொதுமக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்
5) <u>சமூக மாற்றத்திற்கான கருவி</u>
   - அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை, அரசுத்துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும்.
   - ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த, துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.
6) <u>பொது மக்களின் நிதியை தவறாக பயன்படுத்துதலினால் ஏற்படும் இடர் குறைவு</u>
   - துறைவாரி நிறுவனங்களின் வரவு செவு திட்டம் கணக்கு மற்றும் தணிக்கை செயல்முறைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
   - இதனால் பொது மக்களின் நிதியை தவறாக பயன்படுத்துவதினால் ஏற்படும் இடர்ப்பாடு குறைகிறது
7) <u>அமைச்சகத்தின் விதிகள் மற்றும் செயல்பாடுகள் முறையாக பின்பற்றப்படும்</u>
   - அமைச்சகரின் நேரடி கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் மூலமே துறைவாரி நிறுவனங்கள் இயங்குகிறது.
   - பொதுமக்களின் நலனுக்கு பாதிப்பு இல்லாமல் அத்துறை அமைச்சகம் விதிகளையும் செயல்முறைகளையும் வகுக்கிறது.

( அல்லது )

41 ஆ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

1) <u>பொது வருங்கால வைப்பு நிதி</u> :
   - இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில், இது மிகப் பாதுகாப்பான நீண்டகால முதலீட்டு வாய்ப்பாகும்.
   - இதற்கு முழுமையான வருமானவரி விலக்கு உண்டு.
   - இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம்.
   - இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப் பெறமுடியாது.
   - முதிர்வு தேதிக்கு முன்பாக முதலீட்டாளருக்கு நிதி நெருக்கடி அல்லது நிதித் தேவை ஏற்பட்டால், இந்தக் கணக்கிலிருந்து கடன்பெற்று நிதிக் நெருக்கடியை சமாளித்துக் கொள்ளவாய்ப்பு உள்ளது.



www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

2) <u>பரஸ்பர நிதிகள்</u>

www.Padasalai.Net

- ❖ பரஸ்பர நிதி என்பது, நிதிநிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து, பல்வேறு பரஸ்பர நிதித் திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை, பங்குச்சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.
- ❖ இதன்மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச்சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.
- ❖ பரஸ்பர நிதி நிறுவனங்கள் சிறு முதலீட்டார்கள் தேவைக்கு ஏற்ப, பலதரப்பட்ட திட்டங்களை வைத்துள்ளன.

3) <u>நேரடி சம உரிமை பங்குகள் (அல்லது) பங்கு கொள்முதல்</u>

- ❖ தனிநபர், பங்குகளில் முதலீடு செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்யும் முன்பாகப் பங்கு மாற்றகங்கள் வாயிலாக விற்கப்படும் பங்குகளைக் குறித்துச் சில செய்திகளை ஆராய்ந்து அறிதல் மிக அவசியம்.

4) <u>அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்</u>

- ❖ அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும்.
- ❖ ஒரு வீட்டு மனை அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வாங்குவது என்பது, மிகச் சிறந்த தனி மனித முதலீட்டு முறைகளில் ஒன்றாக விளங்குகிறது.

5) <u>விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்</u>

- ❖ தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் முதலீடு செய்வது என்பது, மிகப்பழமையான மற்றும் எக்காலத்திற்கும் ஏற்ற முதலீட்டு வழிகளில் ஒன்றாகும்.
- ❖ சந்தை நிலைக்கேற்றார் போல், உலோகங்களின் மதிப்பு மெதுவாக ஆனால் உறுதியாக அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. இவ்வகை முதலீட்டில், முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும்.

6) <u>அஞ்சலகச் சேமிப்பு திட்டங்கள்</u>

- ❖ அஞ்சலகத்தில் வெவ்வேறு விதமான சிறுசேமிப்பு திட்டங்கள் உள்ளன.
- ❖ அவை
  1. அஞ்சலக சேமிப்பு கணக்கு
  2. அஞ்சலக தொடர் வைப்புக்
  3. அஞ்சலக நிலைவைப்பு கணக்கு
  4. அஞ்சலக மாதாந்திர வருவாய்கணக்கு திட்டம்
  5. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்
  6. பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு
  7. தேசியச் சேமிப்பு பத்திரங்கள் ஆகியவை ஆகும்.
- ❖ அஞ்சல் துறையில் உள்ள மேற்கண்ட திட்டங்களில் தங்கள் தேவைகளுக்கேற்ப முதலீட்டார்கள் முதலீடு செய்து பயன் பெறலாம்.

7) <u>பொது வைப்புகள்</u>

- ❖ வங்கிகளில் நிலைவைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட, பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை.
- ❖ இதில் முதலீட்டாளர், முதலீட்டு கால அளவை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
- ❖ முதலீட்டாளர் அந்த முதலீட்டு தொகையை, முதிர்வு காலத்திற்கு முன்பாக திரும்ப எடுக்க முடியாது.
- ❖ நீண்டகாலத்திற்கு முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்கள் பொது வைப்பினைத் தேர்ந்தெடுக்கலாம்.



8) <u>நிறும முறிகள் அல்லது கடன் பத்திரங்கள்</u> (Bonds)

www.Trb Tnpsc.com

- ❖ தாங்கள் சிரமப்பட்டுச் சம்பாதித்த பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்களுக்கு நிறும முறிகள்(பத்திரங்கள்) சீரிய முதலீட்டு வாய்ப்புகளில் ஒன்றாகும்.

9) <u>காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி</u> (Unit Linked Insurance Plans)

- ❖ ULIP என்பது, ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும்.
- ❖ இது காப்பீடு செய்பவருக்கு, இழப்பை ஈடுசெய்வதோடு பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களில், பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பைஅளிக்கிறது.

10) <u>வங்கி வைப்புகள்</u>

1. <u>நிலைவைப்பு</u>
   - ❖ நிலைவைப்பு ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு முதலீட்டாளர் தங்கள் பணத்தை முதலீடு செய்ய உதவுகிறது.
   - ❖ குறைந்தஅளவு ஏழு நாட்கள் முதல் அதிகளவு பத்து ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு இந்தக்கணக்கினைத் துவக்கலாம்.
   - ❖ நிலைவைப்பு கணக்கு வைத்திருப்போர். அந்தநிலைவைப்பு ரசீதின் பேரில் கடன் பெறலாம்.
   - ❖ அந்தக்கணக்கு வைத்திருப்போர் முதிர்வு தேதிக்கு முன்பாக வைப்புத் தொகையைப் திரும்பப் பெறமுடியாது.
2. <u>தொடர் வைப்பு</u>
   - ❖ நிரந்தர, சீரான வருவாயை விரும்புபவர்கள் தொடர் வைப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.
   - ❖ இந்த வைப்புக் கணக்கின் காலம் குறைந்த அளவு 1 வருடம், அதிக அளவு 10 வருடங்கள் ஆகும்.
   - ❖ தொடர் வைப்பு கணக்கு வைத்திருப்போர் முதிர்வு தேதிக்கு முன்பாக அதில் உள்ள தொகையை எடுக்க முடியாது,
   - ❖ இருப்பினும் செலுத்திய தவணைத் தொகைகளின் மேல்கடன் பெறலாம்.

42. அ) உள் நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ளவேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 )

| வ. எண் | அடிபடை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|---|
| 1 | பொருள் | இது ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும் | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும் |
| 2 | வியாபாரத்தில் பங்கு பெறுவோர் | ஒரே நாட்டில் உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர் | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர் |
| 3 | உற்பத்திக் காரணிகளின் | உற்பத்திக் காரணிகள், உழைப்பு,முதல் , தொழில் நுட்பம் | உற்பத்திக் காரணிகள், உழைப்பு,முதல் , தொழில் |



www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | இயக்கம் | ஆகியவைதடையில்லாமல் நாட்டின் எல்லைக்குள் இடம்பெயர முடியும் | நுட்பம் ஆகியவைதடையில்லாமல் நாட்டின் எல்லைதாண்டி இடம்பெயர முடியும் |
| 4 | நுகர்வோரின் தன்மை | இதில், நுகர்வோர் ஒருநாட்டின் கலாச்சாரம், நடத்தை, விருப்பம், சட்ட நடைமுறை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் இணக்கப்பட்டுள்ளார்கள் | இதில், நுகர்வோர் உலகநாடுகளின் கலாச்சாரம், நடத்தை, விருப்பம், சட்ட நடைமுறை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் இணக்கப்பட்டுள்ளார்கள் |
| 5 | வியாபார முறை | ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது | பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது |
| 6 | பயன்படுத்தும் நாணய மதிப்பு | உள்ளூர் நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | அயல் நாட்டு நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |
| 7 | போக்குவரத்து | இதில், சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. | கப்பல் மற்றும் விமான போக்குவரத்து பயன்படுத்தப் படுகிறது |
| 8 | இடர் | இடரின் அளவு குறைவு | இடரின் அளவு அதிகம் |
| 9 | சந்தையின் அளவு | ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டது | ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து செல்கிறது. |
| 10 | சுங்கத்தீர்வை செலுத்துதல் | சுங்கத்தீர்வை செலுத்த பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறைவு | சுங்கத்தீர்வை செலுத்த பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் சிக்கலானவை |

( அல்லது )

**42. ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரத்தின் ஏதேனும் ஐந்து சிறப்பியல்புகளை விவரி.**

1) இது, இந்திய நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியில் வெளியிடும் ஒரு வகை பத்திரம் ஆகும்.
2) இவை, கடனீட்டுப்பத்திரங்களைப் போல பட்டியலிடப்பட்டு, அயல்நாட்டு பங்கு மாற்றகங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.
3) இது மாற்றத்தக்க கடன் ஆவணமாகும். இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்.
4) இதனை வைத்திருப்பவர்களுக்கு, முன் குறித்த விலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பங்குகளாக மாற்றிக் கொள்ளவும் உரிமை தரப்படுகிறது.
5) குறிப்பிட்டகாலத்திற்கு பின், இவைகளை நேர்மைபங்குகளாகவோ அல்லது வைப்பு இரசீதாகவோ மாற்றிக்கொள்ள முடியும்.
6) இந்தப் பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை, வெளிப்புற வணிகக் கடன் தொடர்பாக இயற்றப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறி முறைப்படியே பயன்படுத்தப்பட வேண்டும்.



**43. அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. ( ஏதேனும் 5 )**

1) <u>மிக்க நம்பிக்கை</u>
   - ❖ இக்கோட்பாட்டின்படி, காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.
   - ❖ காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும்,
   - ❖ காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்துவிட வேண்டும்.
2) <u>காப்பீடு பெறுநலன்</u>
   - ❖ காப்பீடு பெறுநலன் என்பது, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது.
   - ❖ காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்கவேண்டும்.
3) <u>ஈட்டுறுதி</u>
   - ❖ ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும்.
   - ❖ காப்பீடு பெறுநருக்கு, உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்கவேண்டும்.
   - ❖ இழப்பைவிட கூடுதலான தொகை வழங்கப்படாது.
4) <u>அண்மைக் காரணம்</u>
   - ❖ ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காணவேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும்.
5) <u>பகிர்ந்தளித்தல்</u>
   - ❖ ஒரே கருப்பொருள், ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு “இரட்டைகாப்பீடு என்று பெயர்.
   - ❖ காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை, சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.
6) <u>பகர உரிமை</u>
   - ❖ பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும்.
   - ❖ காப்பீடு பெறுநர், தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும், கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.
   - ❖ அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாட்டுக்கு எதிராக அமைந்து விடும்
7) <u>இழப்பை மட்டுப்படுத்தல்</u>
   - ❖ காப்பீடு பெறுநர் காப்பீடு செய்த கருப்பொருளுக்கு விபத்து நேரும் போது காப்பீடு தருநருக்கு ஏற்படும் இழப்பைக் குறைக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வண்ணம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.
   - ❖ காப்பீடு பெறுநர் கருப்பொருளுக்கு காப்பீடுதிட்டாவணம் எடுத்தபின் அதின் பாதுகாப்பில் கவனக்குறைவாக இருக்கக் கூடாது என்பதே இந்தக் கோட்பாடாகும்.

( அல்லது )



www.Padasalai.Net
www.Tnpsc.com
www.Padasalai.Net
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

43. ஆ) வருமானம் என்ற சொல்லில் அடங்கியுள்ளவை யாவை?

www.Padasalai.Net

1) வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்பட்ட லாபம் மற்றும் ஆதாயம்.
1) பங்காதாயம்
2) தொண்டு நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் பெரும் நன்கொடைகள்.
3) ஊதியத்திற்கு மாற்றாக பெறும் இதர வருமானங்கள்.
4) ஏற்றுமதிக்காக வழங்கப்படும் பல்வேறு விதமான ஊக்கத் தொகைகள்.
5) கூட்டாளி ஒருவர், கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து பெறும் வட்டி, ஊதியம், ஊக்கத்தொகை, கழிவு அல்லது மேல் வருமானம்.
6) மூலதன ஆதாயங்கள்.
7) தமது உறுப்பினர்களுடன் கூட்டுறவுச் சங்கமாக வங்கியில் வணிகத்தை மேற்கொண்டு, பெற்ற இலாபங்களும், ஆதாயங்களும்.
8) குதிரை பந்தயம், சீட்டு விளையாட்டுகள் மற்றும் அதே வகையான ஏனைய விளையாட்டுகள் உள்ளிட்ட பந்தயங்கள், குறுக்கெழுத்துப் போட்டிகள், பரிசுச் சீட்டுகள் ஆகியவற்றில் கிடைத்த பரிசுத் தொகைகள்.
9) கருதப்பட்ட வருமானங்கள்.
10) சேமநல நிதி அல்லது ஓய்வுகால நிதி போன்றவைகள் மூலமாக பெறப்பட்ட தொகை.
11) பிரதான காப்புறுதி காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கூடுதல் சிறப்பு தொகை.
12) வியாபாரத்தோடு தொடர்பில்லாமல், ஏதேனும் செயலில் ஈடுபட்டு இருப்பின் அல்லது தொழில்நுட்ப அறிவு காப்புரிமை மற்றும் பதிப்புரிமை இவைகளைப் பகிர்ந்து கொள்ளாமல், ஏதேனும் தொகை எந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பட்டிருந்தாலும்.
13) இயக்குனர் அல்லது நிறுத்தில் கணிசமான அக்கறை கொண்ட ஒரு நபர் அல்லது அவரது உறவினர் அல்லது இயக்குனர் ஒருவரின் உறவினர் ஆகியோரால் நிறுமத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் பயன் அல்லது மேல் வருமானம்.
14) பிரிவு 56 (2) (VI) இன் படி பெறப்பட்ட நன்கொடைகள்.

44. அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.

1) <u>உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி</u>
 - சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது , வங்கியியல் மேற்பார்வை பேஸல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது.
 - பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் (IMF) டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக, இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

2) <u>இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்</u>
 - நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த, விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கி வருகிறது.



www.Trb Tnpsc.com

 - இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது.
 - எந்தவணிக வங்கியையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

3) <u>பணவியல் உச்ச நிலை அதிகாரி</u>
 - விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி நிர்மாணிக்கிறது.
 - இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கி கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

4) <u>பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்</u>
 - பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்களான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தகச் சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித் தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது.
 - இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு, குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

5) <u>புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது</u>
 - இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக ,எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது.
 - ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

<u>பாரம்பரியப் பணிகள்</u>

1. அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகராக செயல்படுதல்
2. ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதில் முற்றுரிமை
3. வங்கியர்களின் வங்கியர்
4. கடன் மற்றும் புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்
5. இறுதி நிலை கடன் ஈவோர்
6. தீர்வக அமைப்புகள்
7. அந்நியச் செலாவணி இருப்புகளின் பாதுகாப்பாளர்
8. அந்நியச் செலாவணி விகிதத்தின் பராமரிப்பு
9. நன்பகத் தன்மையுள்ள தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளியீடு

<u>மேம்பாட்டுப் பணிகள்</u>

1) பொதுமக்களிடையே வங்கி பழக்கங்களை வளர்ப்பது
2) குறை தீர்வு வடிக்கைகள்
3) வேளாண்மை வளர்ச்சி
4) சிறிய அளவிலான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்
5) வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துதல்
6) கூட்டுறவு துறையினை ஆதரித்தல்



www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

( மேற்கண்ட தலைப்புகளுக்கு சிறு விளக்கம் அளித்தல் )

( அல்லது ) www.Padasalai.Net

**44. ஆ) முத்ரா வங்கி - விளக்குக.**

- முத்ரா வங்கி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது
- புதிய தொழில் தொடங்குபவர்கள் சந்திக்கும் நிதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், ரூ. 20 ஆயிரம் கோடி முதலீட்டுடனும், ரூ.3 ஆயிரம் கோடி கடன் உத்திரவாத நிதியுடனும் மத்திய அரசால் 'குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை' (முத்ராவங்கி) தொடங்கப்பட்டது.
- குறுந்தொழில் முனைவோர் தங்களின் புதிய தொழிலைத் தொடங்கவும்,
- தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை மேம்படுத்தவும்,
- தொழிலை அடுத்த வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வோர், தங்களின் தொழிலை விரிவு படுத்திக் கொள்ளவும் முத்ரா வங்கி கடன்களை வழங்குகிறது.

**45. அ) கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.**

i) நிறுவனத்தின் பெயர்
ii) வணிகத்தின் தலைமையிடம்
iii) பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்
iv) அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
v) ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் மற்றும்
vi) கூட்டாண்மையின் காலம்

- மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் பதிவுக்கட்டணம் ரூ.3 செலுத்தி, சமர்ப்பிக்க வேண்டும்.
- மேற்காணும் அறிக்கையில், மாற்றம் செய்ய விரும்பினால், பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும்.

( அல்லது )

**45. ஆ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. ( ஏதேனும் 5 )**

1) நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.
2) தொழில் அமைப்புகளின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.
3) பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களைச் சீரமைத்தல்
4) முதலீட்டாளர்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க செய்தல்
5) நிறுமங்களுக்கான மூலதனச் செலவினைக் குறைக்கின்றன.
6) பங்கு விலையின் மீது நேர்மறை தாக்கத்தைக் கொண்டுள்ளது.
7) பெருநிறுவன ஆளுகைக் குழு நிறுமங்கள் தங்களின் குறிக்கோள்களை அடைய மேலாளர்களுக்கு ஊக்கமளிப்பது
8) தேவையற்ற கழிவு / விரயம், ஊழல்கள், இடர்பாடுகள் மற்றும் தவறான மேலாண்மை போன்றவற்றை தவிர்த்தல்
9) நிறுமம் மீதான மக்களின் கருத்துருவத்தைக் கூட்டுகிறது.
10) அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டைச் சரியான முறையில் கையாளுகிறது.
11) வள ஆதாரங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது.
12) தொழில்நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.



**46. அ) பன்னாட்டு நிறுவனத்தின் தீமைகளை விவரி.** www.Trb Tnpsc.com

1) <u>உள்ளூர்த் தொழில்களுக்கு அபாயம்</u>
   - இதன் மிகப் பெரிய பொருதளாரசச் சக்தி, உள்நாட்டுத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு தடையை ஏற்படுத்துகிறது.
   - பல உள்நாட்டு நிறுவனங்கள், இவைகளால் அழிக்கப்படுகின்றன.
2) <u>வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை மாற்றுதல்</u>
   - வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை, வளரும் நாடுகளுக்கு மாற்றுவதன் மூலம், நாடுகளின் தொழில் முன்னேற்றம் ஏற்படுவது இல்லை
3) <u>ஏழை மக்களுக்கு நன்மையில்லை</u>
   - பணக்காரர்களால் மட்டுமே இந்நிறுவனங்களின் பொருட்களை வாங்க முடியும்.
   - ஏழை மக்களுக்கு , இந்நிறுவனங்களால் எப்பயனும் இல்லை.
4) <u>உள்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு</u>
   - உள்நாட்டு மக்களுக்காகக் கணிசமான அளவில் வேலை வாய்ப்பினை, பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கி தருவது இல்லை.
5) <u>உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் புறக்கணிப்பு</u>
   - உள்நாட்டு முதலீட்டினால், பன்னாட்டு நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்டினாலும், உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதை இவை புறக்கணிக்கின்றன.

( அல்லது )

**46. ஆ) உரிமையாளர்கள் முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துக.**

1) <u>அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள்</u>
   - எந்த ஒரு வங்கியின் பங்குகளில் 51 சதவிகிதத்திற்கும் குறைவில்லாத பங்குகளை அரசு பெற்றிருந்தால், அது அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

   <u>எ.கா</u> : 1. பாரத ஸ்டேட் வங்கி (SBI) 2. இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI)
2) <u>பொதுக் கூட்டுரு வகை வங்கிகள்</u>:
   - ஒவ்வொரு பொதுக் கூட்டுரு வங்கியும், பாராளுமன்றத்தின் தனிச் சட்டத்தால் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு முழு சொந்தமானதாக உள்ளன.

   <u>எ.கா</u> : IFCI, SIDBI, EXIM வங்கி
3) <u>தனியார் துறை வணிக வங்கிகள்</u> :
   - தனி நபர்களுக்குச் சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.
   - அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும், அதன் உறுப்பினர்களான பொதுமக்களுக்குச் சொந்தமானவை.

   <u>எ.கா</u> :
   1. லட்சுமி விலாஸ் வங்கி 2. கரூர் வைஸ்யா வங்கி 3. கோடாக் மஹிந்திரா வங்கி



www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

47. அ) தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க

www.Padasalai.Net

| அடிப்படை | தொழில் | சிறப்புத் தொழில் | வேலை வாய்ப்பு |
|---|---|---|---|
| 1. பணியின் தன்மை | சரக்கு மற்றும் சேவையை பொதுமக்களுக்கு அளித்தல் | சிறப்பு தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல் |
| 2. தகுதி | குறந்தபட்ச தகுதி என்று ஏதும் இல்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தகுதியும் / பயிற்சியும் பெறுதல். | குறந்தபட்ச தகுதி தேவை இல்லை |
| 3. மூலதனம் | நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதன அளவு மாறும் | இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும் | மூலதனம் ஏதும் தேவையில்லை |
| 4. வெகுமதி | இலாபம் | தொழில்முறை கட்டணம் | கூலி / சம்பளம் |
| 5. இடர் | இலாபம், நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை |
| 6. உரிமை மாற்றம் | உரிமை மாற்றம் செய்யப்படும் | உரிமை மாற்றம் செய்ய இயலாது | உரிமை மாற்றம் செய்ய முடியாது |

( அல்லது )



47. அ) ஏட்டுக்கடன் முகமைக்கும் பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமைக்கும் இடையிலான வேறுபாடுகள்

www.Trb Tnpsc.com

| வ.எண் | அடிப்படை பண்புகள் | ஏட்டுக்கடன் முகமை | அயல்நாட்டு (அ) பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை |
|---|---|---|---|
| 1. | நிதிக்கான அடிப்படை | ஏற்றுமதியின் கடன் தரத்தின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது | வங்கியின் நிதித் தரத்தைப் பயன்படுத்தும் அளவின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது. |
| 2. | கட்டணம் (அ) செலவு | சரக்கை விற்பவர் நிதிச் சேவைக் கட்டணத்தை ஏற்றுக்கொள்கிறார் | அயல்நாட்டுக் கடனாளி நிதிச் சேவைக் கட்டணத்தை ஏற்றுக் கொள்கிறார் |
| 3. | பொருந்தும் காலம் | குறுகிய கால முதிர்வுக் கொண்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் | மத்திய கால முதிர்வு கொண்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் |
| 4. | நிதியின் அளவு | பெறுதல்களின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட (அதிக அளவாக 80 விழுக்காடு) சதவீதம் மட்டுமே பேராளனாள் நிதி வகைப்படுகிறது. | பெறுதல்களின் மதிப்பு முழுவதும் (100 விழுக்காடு) பேராளன் நிதி வழங்கப்படுகிறது. |
| 5. | இடர் ஏற்றல் | நிதிச் சேவையில் ஏற்படும் இடர்களை விற்பனையாளருக்கு மாற்றிவிட இயலும். | அனைத்து இடர்களையும் அயல்நாட்டு நிதி தரகு செய்யும் பேராளனே ஏற்றுக்கொள்கிறார். |



www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com